# பெறுகை அறிவித்தல்

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## சபை நிதி 2025 மற்றும் PSDG 2025

1. வலிகாமம் மேற்கு பிரதேசசபை **சபை நிதி மற்றும் PSDG** நிதி என்பவற்றைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
3. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில், நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V** இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணிவரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் **05.05.2025ம் திகதியிலிருந்து 19.05.2025 ம் திகதி வரை சனி ஞாயிறு தவிர்ந்த வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல்** பி.ப **14.00 வரை** மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.3000 (வரிநீங்கலாக)** இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு **20.05.2025 ம் திகதி** மு.ப **10.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அலலது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
8. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து கேள்விசெல்லுபடியாகும் காலம். | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடி யாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | சுழிபுரம் பகுதி வீதிகள் புனரமைப்பு ( தேவாலய வீதி 9ம் ஒழுங்கை, வேரம் வெள்ள வாய்க்கால் வீதி, கலட்டி வீதி – மிகுதி வேலை, புது வீதி மிகுதிவேலை) **NP/14/41(17)/02/CF/09/2025** | 8.024 Mn. | 84 நாட்கள் | C8 & Above வீதிப் புனரமைப்பு | 77 நாட்கள் | 05.08.2025 | 81,000.00 | 02.09.2025 |
| 02 | சங்கானை பகுதி வீதி திருத்தம் (ஓடக்கரை வீதி 2ம் ஒழுங்கை, வைத்தியசாலை வீதி 1ம் ஒழுங்கை (MOH வீதி) **NP/14/41(17)/02/CF/10/2025** | 3.741 Mn | 60 நாட்கள் | C9 & Above வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.07.2025 | 38,000.00 | 05.08.2025 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 03 | வட்டுக்கோட்டை பகுதி வீதிகள் திருத்தம் (கனகரட்ணம் வீதி 2ம் ஒழுங்கை, அந்திரான் வீதி 2ம் ஒழுங்கை, வலிமேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலக கிழக்கு வீதி) **NP/14/41(17)/02/CF/11/2025** | 7.234 Mn. | 84 நாட்கள் | C8 & Above வீதிப் புனரமைப்பு | 77 நாட்கள் | 05.08.2025 | 73,000.00 | 02.09.2025 |
| 04 | அராலி பகுதி வீதிகள் திருத்தம் (மீனவ வீதி -மிகுதி வேலை, குமுக்கன் 1வது ஒழுங்கை (வேலன்காடு 2ம் ஒழுங்கை), மாவத்தைவிளையாட்டுக்கழக வடக்கு ஒழுங்கை, சமுர்த்தி ஒழுங்கை) **NP/14/41(17)/02/CF/12/2025** | 6.818 Mn. | 84 நாட்கள் | C8 & Above வீதிப் புனரமைப்பு | 77 நாட்கள் | 05.08.2025 | 69,000.00 | 02.09.2025 |
| 05 | நெல்லியான் நீர்ப்பாசனத்திட்டத்தின் நடைபாதை திருத்தம் **NP/14/41(17)/02/PSDG/02/2025** | 0.847 Mn | 30 நாட்கள் | C9 & Above வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.07.2025 | 9,000.00 | 05.08.2025 |

கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 08.05.2025 அன்று மு.ப.10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
பெறுகைக் குழு,
வலிகாமம் மேற்குபிரதேச சபை,
சுழிபுரம்.
05.05.2025.

சண்முகராஜா பாலருபன்
செயலாளர்
வலிகாமம் மேற்கு பிரதேச
சுழிபுரம்.